கவனிக்க.– 27.06.2025 ஆந் திகதிய 2443 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2444 - 2025 ජූලි මස 04 වැනි සිකුරාදා - 2025.07.04

2444 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 286 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 295 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, யூலை மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, யூலை மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் **(பதில்)**.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


285 - B 82697 - 403 (2025/06)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள வழங்கல் பத்திரத்தினை செல்லுபடியற்றதாக்குதல் - (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், களனி பிரதேச செயலகப் பிரிவில், பிரதேச அலுவலர்/ (மாகாணங்களுக்கிடையேயான) காணி ஆணையாளர்/ உதவிக் காணி ஆணையாளர் ஜே. ஏ. டீ. ஜீ. எஸ். ரணசிங்ஹ ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ் கௌரவ சனாதிபதி அவர்களினால் 1999.10.20 ஆந் திகதி வழங்கப்பட்ட இல. க/பி/களனி/158 எனும் வழங்கல் பத்திரத்தின் உரித்தாளரான இல. 59/105, நிலமேகேவத்தை, பெதியாகொடை, களனி இல் குடியிருக்கும் அதிகாரி ஆரச்சிலாகே தொன் சேனாதீர அவர்களிடம் வழங்கி கொழும்பு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இல. சீ 2/110 இன் கீழ் 2000.02.18 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணிக்கு வாரிசொருவராவதற்கு சட்டபூர்வமாக உரித்தாளரொருவர் இல்லாததனால் அல்லது உரித்துடையவரொருவர் இருந்தும் அவர்/அவள் வாரிசாவதற்கு விரும்பாமையினால் வாரிசாக நியமிப்பதற்கு எவரொருவரும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், குறித்த வழங்கல் படிவம் மேற்படி சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் செல்லுபடியற்றதாக்குவதற்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றது எனவும் இதன் மூலம் தெரிவிக்கின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருக்குமாயின் அதனை 2025.07.25 ஆந் திகதிக்கு முன்னதாக என்னிடம் எழுத்து மூலம் தெரிவித்தல் வேண்டும்.

**அட்டவணை**

கம்பஹா நிர்வாக மாவட்டத்தில் களனி பிரதேச செயலக பிரிவில் - பத்துவ/ கோரளை இல. 262 - பெதியாகொடை கிராம அலுவலர் பிரிவில் பெதியாகொடை எனப்படும் கிரரமத்தில் அமைந்துள்ளதும், சர்வே ஜெனராலினால் தயாரிக்கப்பட்ட அவரது பொறுப்பில் உள்ள மற்றும் சர்வே ஜெனராலினால் தொகுப்பு இல. 66/8/2 எனும் கள பத்திரத்தில்/ - அவர்களினால் தொகுப்பு இல. க. 2803 எனும் தரைபட வரைபடத்தின் - அவர்களினால் தொகுதி இல. - எனும் கோடுகள் குறிப்பு இல. 67 எனும் காணித்துண்டாக காட்டப்பட்டுள்ளதும், பரப்பளவில் ஹெக்டயார்/ ஏக்கர் 0.0077, றூட் - பேர்ச் - விஸ்தீரளாம் கொண்டதுமான கீழே காட்டப்பட்டுள்ளதன் படியான எல்லைகளைக் கொண்ட அரச காணி, நிலமேகேவத்தை -

வடக்கு : துண்டு இல. 44, 69 மற்றும் 68;
கிழக்கு : துண்டு இல. 68 மற்றும் 66;
தெற்கு : துண்டு இல. 66 மற்றும் 38;
மேற்கு : துண்டு இல. 38 மற்றும் 44

ஜே. ஏ. டீ. ஜீ. எஸ். ரணசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
களனி.

2025, மாச்சு 14.

07 - 532/1

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 1 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அன்பளிப்பு பத்திரத்தை இரத்து செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மேல் மாகாண சபை, கம்பஹா மாவட்ட மீரிகமை பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையே) டப்ளிவ் பி. பிரசாத் இந்திக்க ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ், அதிமேதகு சனாதிபதி அவர்களால் 1986.12.30 ஆந் திகதி கம்/பிர/9321 என்ற இலக்கத்தைக் கொண்ட அன்பளிப்பு பத்திரம் மக்கனிகொடை பஸ்யாலை என்ற இடத்தைச் சேர்ந்த ரனசிங்க அச்சிகே விஜேசேகர என்பவருக்கு வழங்கப்பட்டு

நீர்கொழும்பு மாவட்ட பதிவாளர் காரியாலயத்தில் சுவர்ணபூமி/மீரி/462 என்ற இலக்கத்தின் கீழ் 1987.08.13 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் அட்டவணையில் விபரிகக்கப்பட்டுள்ள காணிக்கு சட்ட ரீதியான பின் உரித்தாளி ஒருவர் இல்லை அல்லது இருந்தும் அவர் உரிமை கோர விரும்பவில்லை போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இக் காணிக்கு சட்ட ரீதியான பின் உரித்தாளி ஒருவர் இல்லை எனக் கருதி மேற்படி அன்பளிப்பு பத்திரத்தை காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்து செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதை இத்தால் அனைவருக்கும் அறியத் தருகிறேன். இது தொடர்பாக, ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை 2025.07.25 ஆந் திகதிக்கு முன் எழுத்து மூலமாக எனக்கு அறியத் தரவும்.

**அட்டவணை**

கம்பஹா நிர்வாக மாவட்ட மீரிகமை பிரதேச செயலகப் பிரிவு யட்டிகஹபத்துவை/25 ஆம் கோராளை ஹாப்பிட்டிகமை கிராம அலுவலர் பிரிவில் மக்கனிகொடை என்ற ஊரில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவையாளர் நாயகம் அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. - என்ற களப் பத்திரத்தில்/ - அவர்களால் தயாரிக்கப்பட்ட இல.கெ. மெ. மு. பி. 68 என்ற காணிப் பிரித்தெடுப்பு களப்பத்திரத்தில்/ - அவர்களால் தயாரிக்கப்பட்ட இல. - என்ற களப் பத்திரத்தில் 252 ஆம் இலக்க காணித்துண்டாக குறித்திக் காட்டப்பட்டுள்ள 0.430 ஹெக்டயார் பரப்பளவுள்ள பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ள அரச காணி-

வடக்கு : காணித்துண்டு இல. 248;
கிழக்கு : உட்பிரவேச வழி;
தெற்கு : உட்பிரவேச வழி;
மேற்கு : காணித் துண்டு இல. 251.

டப்ளியூ. பி. பிரசாத்த,
பிரதேச செயலாளர்,
மீரிகம.

2025, மாச்சு 14.

07 - 532/2

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கான - (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

தென் மாகாண சபையின், காலி மாவட்டத்தில், நாகொட பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையே) சதிசானி லக்னிமா யத்தெஹிகே எனும் நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதியால் ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்றாறாம் ஆண்டு மே மாதம் இருபத்து நான்காம் திகதி வழங்கியுள்ள இலக்கம் கா/14/அ/43045 கா. பே. 20642 கொண்ட அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான வாடியகந்தவில் வசிக்கும் விலேகே ஜோன்விடம் கையளித்து காலி மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் எல். டீ. ஓ. கே 20/70 இன் கீழ் 1997, யூன் 26 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ் அட்டவணையில் காணப்படும் காணிக்கு பின்னுரிமையாளராவதற்காக சட்டபூர்வமான ஒரு உரிமையாளர் இல்லாமையால் அல்லது உரிமையாளர் ஒருவர் இருப்பினும் அவன்/ அவள் பின்னுரிமையாளராக விரும்பாமையால் பின்னுரிமைக்கு நியமனம் பெற ஒருவரும் இல்லையென அறிக்கைப்பட்டிருப்பதால் அவ் அளிப்புப்பத்திரத்தை மேல் குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என இத்தால் அறியத்தருகிறேன். அவ்விடயம் பற்றி ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் 2025.07.25 ஆந் திகதிக்கு முன் என்னிடம் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

காலி நிர்வாக மாவட்டம், நாகொட பிரதேச செயலாளர் பிரிவில் கங்கட்ட பற்றில்/ கோரளையில் பரணதானாயம்கொட கீழ் கிராம அலுவலர் பிரிவில் வாடியகந்த எனும் ஊரில் அமைந்துள்ளதுமான, நில அளவை நாயகத்தால் தயாரித்த இலக்கம்

இ. கி. வ. 526 கொண்ட வெளிக்களத்தாளில், அளவில் 01 (ஒரு) ஏக்கர் 00 றூட், 00 பேர்ச் விஸ்தீரணம் கொன்டதும், பின்வருமாறு எல்லைக்கொண்டதுமான அரச காணி -

வடக்கு : கே. ஏ. எட்வினுக்கு சொந்தமான குத்தகைக் காணி;
கிழக்கு : டப்ளியூ. ஏ. சுமதிபால வசிக்கும் காணி;
தெற்கு : டப்ளியூ. ஜீ. சீ. ஜினதாசவின் குத்தகைக் காணி;
மேற்கு : டப்ளியூ. பீ. காமிணீ மற்றும் எச். பீ. பிரான்சிஸ்க்கு சொந்தமான காணி.

சதிசானி லக்னிமா யத்தெஹிகே,
பிரதேச செயலாளர்,
நாகொட.

2025, ஒற்றோபர் 15.

07 - 533/1

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கான - (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

தென் மாகாண சபையின் காலி மாவட்டத்தில் பெந்தொட்ட பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் பந்துல பிரீதிராஜ் அபேசேகர எனும் நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதியால் 1994, நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி வழங்கியுள்ள இலக்கம் கா/6/அ 17213 எல். எல் 53444 கொண்ட அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான மஹ ஊரகஹ, கனத்தவத்த இல் வசிக்கும் லியனகமகே ரொசலினிடம் கையளித்து பலபிட்டி மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் எல். டீ. ஓ. 511 இன் கீழ் 1995.05.29 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ் அட்டவணையில் காணப்படும் காணிக்கு பின்னுரிமையாளராவதற்காக சட்டபூர்வமான ஒரு உரிமையாளர் இல்லாதமையால் அல்லது உரிமையாளர் ஒருவர் இருப்பினும் அவன்/ அவள் பின்னுரிமையாளராக விரும்பாதமையால் பின்னுரிமைக்கு நியமனம் பெற ஒருவரும் இல்லையென அறிக்கைப்பட்டிருப்பதால் அவ் அளிப்புப்பத்திரத்தை மேல் குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என இத்தால் அறியத்தருகிறேன். அவ்விடயம் பற்றி ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் 2025.07.25 ஆந் திகதிக்கு முன் என்னிடம் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

தென் மாகாணத்தின் காலி நிர்வாக மாவட்டத்தில், பெந்தொட்ட பிராந்திய வருமான அலுவலர் பிரிவின் பெந்தர வலல்லாவிட்ட கோரளையில் மேற்கு இலக்கம் 40ஈ தெல்கபலகொட கிராம அலுவலர் பிரிவின் ஊரகஹ எனும் ஊரில் உள்ள, நில அளவை நாயகத்தால் தயாரிக்கப்பட்டு அவர் பொறுப்பிலுள்ள இலக்கம் அ. வ. கா. 2173 கொண்ட வரைபடத்தில் இலக்கம் 171 கொண்ட காணித்துண்டாக பிரதிநிதித்துவ படுத்தியுள்ள அளவில் 0.269 ஹெக்டயார் உள்ளதென கணக்கிட்டுள்ள தெல்கபலகொட கெலே என்று அழைக்கப்படும் பின்வருமாறு எல்லைக் கொண்ட அரச காணித்துண்டு -

வடக்கு : துண்டு இலக்கம் 127;
கிழக்கு : துண்டு இலக்கம் 170;
தெற்கு : துண்டு இலக்கம் 160 மற்றும் 172;
மேற்கு : துண்டு இலக்கம் 172.

பந்துல பிரீதிராஜ் அபேசேகர,
பிரதேச செயலாளர்,
பெந்தொட்ட.

2024, செத்தெம்பர் 30.

07 - 533/2

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை இரத்துச்செய்வதற்கான - (104 பிரிவு) அறிவித்தல்.**

தென் மாகாணம், காலி மாவட்டத்தில், தவலம பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் (மாகாணங்களுக்கிடை) காணி ஆணையாளர், பிரதி காணி ஆணையாளர் நிலூகா எல். சூரியஆரச்சி எனும் நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) உட் பிரிவின் கீழ் அதி மேதகு சனாதிபதியால் 1996.02.26 ஆம் திகதி வழங்கியுள்ள இலக்கம் 2/கா/16/அ 39112 எல். எல். 108715 கொண்ட அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான தாம்மல குடியிருப்பில் வசிக்கும் கங்காணம் கமகே உபாலியிடம் கையளித்து காலி மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் LDO 5421 G 28/115 கீழ் 1996.08.06 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழ் அட்டவணையில் காணப்படும் காணிக்கு பின்னுரிமையாளராவதற்காக சட்டபூர்வமான ஒரு உரிமையாளர் இல்லாதமையால் அல்லது உரிமையாளர் ஒருவர் இருப்பினும் அவன்/ அவள் பின்னுரிமையாளராக விரும்பாதமையால் பின்னுரிமைக்கு நியமனம் பெற ஒருவரும் இல்லையென அறிக்கையிடப்பட்டிருப்பதால் அவ் அளிப்புப்பத்திரத்தை மேல் குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச்செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என இத்தால் அறியத்தருகிறேன். அவ்விடயம் பற்றி ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் 2025.07.25 ஆந் திகதிக்கு முன் என்னிடம் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

காலி நிர்வாக மாவட்டத்தில் தவலம பிரதேச செயலாளர் பிரிவில் ஹினிதும பற்றில் 228 E தாம்மல குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவில் தாம்மல எனும் ஊரில் உள்ள, தவலம பி. செ. பொறுப்பிலுள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தால் தயாரித்த இலக்கம் இ. கி. வ. 486 கொண்ட காணித்துண்டு, அளவில் 01 ஏக்கர் 02 றூட், 00 பேர்ச் விசாலமுள்ளதுமான பின்வருமாறு எல்லைகளைக் கொண்டதுமான அரச காணி: (கொண்டகுலன் கந்த எனும் காணி)

வடக்கு : எம். ஏ. லால் சூலரத்னவின் காணி;
கிழக்கு : எச். ஏ. வசந்தவின் காணி;
தெற்கு : டீ. ஜீ. வீரவங்சவின் காணி;
மேற்கு : எம். கே. எச். குணபாலவின் காணி.

நிலுக எல். சூரியாரச்சி,
பிரதேச செயலாளர்,
(மாகாணங்களுக்கிடைப்பட்ட),
காணி ஆணையாளர்/ பிரதிக் காணி ஆணையாளர்,
தவலம.

பிரதேச செயலாளர்,
தவலம.

2024, ஒற்றோபர் 23.

07 - 533/3

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை இரத்துச்செய்வதற்கான - (104 பிரிவு) அறிவித்தல்.**

தென் மாகாண சபையின், காலி மாவட்டத்தில், வந்துரம்ப பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் நிஹாரா மெலனி வெத்தசிங்ஹ எனும் நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) உப பிரிவின் கீழ் அதி மேதகு சனாதிபதியால் 1982.03.26 ஆம் திகதி வழங்கியுள்ள இலக்கம் கா/அ 230 கொண்ட அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான வந்துரம்ப வசிக்கும் வத்தகே சோமபாலவிடம் கையளித்து காலி மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் L. D. O. H4/18 இலக்கத்தின் கீழ் 1988.02.08 ஆம் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழ் அட்டவணையில் காணப்படும் காணிக்கு பின்னுரிமையாளராவதற்காக சட்டபூர்வமான ஒரு உரிமையாளர் இல்லாதமையால் அல்லது உரிமையாளர் ஒருவர் இருப்பினும் அவன்/ அவள் பின்னுரிமையாளராக விரும்பாதமையால் பின்னுரிமைக்கு நியமனம் பெற ஒருவரும் இல்லையென அறிக்கைப்பட்டிருப்ப தால் அவ் அளிப்புப் பத்திரத்தை மேல் குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச்செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என இத்தால் அறியத்தருகிறேன். அவ்விடயம் பற்றி ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் 2025.07.25 ஆந் திகதிக்கு முன் என்னிடம் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

காலி நிர்வாக மாவட்டத்தில், வந்துரம்ப பிரதேச செயலாளர் பிரிவின் கங்கபட பற்று தெற்கு பற்றில்/ கோரளையில் 221B குழுகஹகந்த கிராம அலுவலர் பிரிவில் வந்துரம்ப எனும் ஊரில் அமைந்துள்ளதுமான - பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவை நாயகத்தால் தயாரிக்கப்பட்ட இலக்கம் - கொண்ட வெளிக்களத்தாளில்/ ------ ஆல் தயாரித்த இலக்கம் - கொண்ட கண்டமிடும் வரைப்படத்தில்/ - ஆல் தயாரித்த இலக்கம் அ. வ. கா. 519 கொண்ட காணி உரித்துப்படத்தில் இலக்கம் 20 கொண்ட காணித்துண்டாக காட்டியுள்ளதுமான அளவில் 01 ஏக்கர் 01 பேர்ச் விசாலமுள்ளதுமான பின்வருமாறு எல்லைகளைக் கொண்டதுமான கொஸ்கொடகந்த எனும் அரச காணி :

வடக்கு : இத் திட்டத்தின் துண்டு இலக்கம் 13 மற்றும் 14;
கிழக்கு : இத் திட்டத்தின் துண்டு இலக்கம் 13 மற்றும் 21;
தெற்கு : இத் திட்டத்தின் துண்டு இலக்கம் 5;
மேற்கு : இத் திட்டத்தின் துண்டு இலக்கம் 19.

நிஹாரா மெலனி வெத்திசில்க,
பிரதேச செயலாளர்,
(மாகாணங்களுக்கிடைப்பட்ட),
காணி ஆணையாளர்/ பிரதிக் காணி ஆணையாளர்,
வந்துரம்ப.

2024, நவெம்பர் 07.

07 - 533/4

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை இரத்துச்செய்வதற்கான - (104 பிரிவு) அறிவித்தல்.**

தென் மாகாண சபையின், காலி மாவட்டத்தில், ரத்கம பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடை) ஜீ. ஜீ. லக்ஷ்மி காந்தி எனும் நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) உட் பிரிவின் கீழ் அதி மேதகு சனாதிபதியால் 1982.04.23 ஆந் திகதி வழங்கியுள்ள கா/அ 1211 கொண்ட அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான மொன்ரோவியாவத்தயில் வசிக்கும் சம்மெ குனேஹாமியிடம் கையளித்து காலி மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் LDO C 1/77 கீழ் 1983.02.11 ஆம் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழ் அட்டவணையில் காணப்படும் காணிக்கு பின்னுரிமையாளராவதற்காக சட்டபூர்வமான ஒரு உரிமையாளர் இல்லாதமையால் அல்லது உரிமையாளர் ஒருவர் இருப்பினும் அவன்/ அவள் பின்னுரிமையாளராக விரும்பாதமையால் பின்னுரிமைக்கு நியமனம் பெற ஒருவரும் இல்லையென அறிக்கைப்பட்டிருப்பதால் அவ் அளிப்புப்பத்திரத்தை மேல் குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச்செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என இத்தால் அறியத்தருகிறேன். அவ்விடயம் பற்றி ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் 2025.07.25 ஆந் திகதிக்கு முன் என்னிடம் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

காலி நிர்வாக மாவட்டத்தில், ரத்கம பிரதேச செயலாளர் பிரிவில் வெல்லபட பற்று தெற்கு/ கோரளையில் இலக்கம் 49 பீ, பன்வில கிராம அலுவலர் பிரிவின் மொன்ரோவியாவத்த எனும் ஊரில் அமைந்துள்ளதுமான காலி நில அளவை அதிகாரி பொறுப்பிலுள்ள மற்றும் நில அளவை நாயகத்தால் தயாரித்த இலக்கம் $0\frac{18}{26,34,42}$ கொண்ட வெளிக்களத்தாளில்/ - ஆல் தயாரித்த இலக்கம் - கொண்ட கண்டமிடும் வரைப்படத்தில் காலி நில அளவை அதிகாரியினால் தயாரித்த இலக்கம் அ. வ. கா 233 காணி உரித்துப்படத்தில் இலக்கம் 13 காணித் துண்டாக காட்டப்பட்டுள்ளதுமான அளவில் 00 ஹெக்டயார்/ ஏக்கர் 01 ரூட் 00 பேர்ச் விசாலமுள்ளதுமான பின்வருமாறு எல்லைக்கொண்டதுமான அரச காணி

வடக்கு : இந்தத் திட்டத்தின் துண்டிலக்கம் 12;
கிழக்கு : இந்தத் திட்டத்தின் துண்டிலக்கம் 53;
தெற்கு : இந்தத் திட்டத்தின் துண்டிலக்கம் 14;
மேற்கு : அ. வ. 1138 இல் துண்டிலக்கம் கிவு 496.

ஜீ. ஜீ. லக்ஷ்மி காந்தி,
பிரதேச செயலாளர்,
(மாகாணங்களுக்கிடைப்பட்ட)
பிரதிக் காணி ஆணையாளர்,
ரத்கம.

2024, ஒற்றோபர் 30.

07 - 533/5

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை இரத்துச்செய்வதற்கான - (104 பிரிவு) அறிவித்தல்.**

தென் மாகாண சபையின், காலி மாவட்டத்தில், நாகொட பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் சதிசானி லக்னிமா யத்தெஹிகே எனும் நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) உட்பிரிவின் கீழ் அதி மேதகு சனாதிபதியால் இரண்டாயிரத்து இருபத்திரண்டாம் ஆண்டு ஏப்பிரல் மாதம் ஆறாம் திகதி வழங்கியுள்ள இலக்கம் GR/7/069112 கொண்ட அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான உடவெலிவிட்டிதலாவ, நாகொட முகவரியில் வசிக்கும் திசாநாயக்க விஜேசிங்ஹ ரூபபால என்பவரிடம் கையளித்து காலி மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் எல். டீ. ஓ கே 44/166 கீழ் 2022 ஆம் ஆண்டு செத்ம்பதெம்பர் மாதம் 23 ஆம் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழ் அட்டவணையில் காணப்படும் காணிக்கு பின்னுரிமையாளராவதற்காக சட்டபூர்வமான ஒரு உரிமையாளர் இல்லாதமையால் பின்னுரிமைக்கு நியமனம் பெற ஒருவரும் இல்லையென அறிக்கைப்பட்டிருப்பதனால் அவ் அளிப்புப்பத்திரத்தை மேல் குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச்செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என இத்தால் அறியத்தருகிறேன். அவ்விடயம் பற்றி ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் 2025.07.25 ஆந் திகதிக்கு முன் என்னிடம் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

காலி நிர்வாக மாவட்டத்தில் நாகொட பிரதேச செயலாளர் பிரிவில் வடக்கு கங்கபட பற்று, 194 சீ, உடவெலிவிடுதலாவ கழிக்கு கிராம அலுவலர் பிரிவின் உடவெலிவிட்டி எனும் ஊரில் அமைந்துள்ளதுமான காலி நில அளவை அதிகாரியின் பொறுப்பிலுள்ள மற்றும் நில அளவை நாயகத்தினால் தயாரித்த இலக்கம் இ. கி. வ. 611 கொண்ட கண்டமிடும் வரைபடத்தில் இலக்கம் 1106 கொண்ட காணித்துண்டாக காட்டியுள்ளதுமான அளவில் 0.4047 ஹெக்டயார் விசாலமுள்ளதுமான போகஹஹேன தெனிய அல்லது மாரக்கொடவத்த என்று அழைக்கப்படும் பின்வருமாறு எல்லைக்கொண்ட அரச காணி: வந்துரு தெனிய கந்த, தெஹிகஹஹேன நிலக்காணி

வடக்கு : துண்டிலக்கங்கள் 1087 மற்றும் 1129;
கிழக்கு : துண்டிலக்கம் 1129;
தெற்கு : துண்டிலக்கங்கள் 1129 மற்றும் 1107;
மேற்கு : துண்டிலக்கங்கள் 1107, 1109 மற்றும் 802.

சதிசானி லக்னிமா யத்தெஹிகே,
பிரதேச செயலாளர்,
நாகொட.

2024, ஒற்பறோபர் 30.

07 - 533/6

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்ளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல்களை (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்.**

வடமத்திய மாகாணத்தின் அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள நாச்சியாதுவ பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் கழுகல பிரசாத் ஷாமிந்த ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) உட் பிரிவின் கீழ், அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1982 ஆம் ஆண்டு ஆவணி மாதம் இருபதாம் (20) ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள அனு/பிர/6617 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான மஹநெழுபாவ ஹிதோகம எனும் முகவரியில் வசிக்கும் ஹொரதலாகே உக்கு என்பவருக்கு கையளிக்கப்பட்டு அநுராதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 1987.09.03 ஆந் திகதி 15/220 ஆம் பதிவேட்டின் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவைணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரி மையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமி க்கப்படவில்லையென அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்பு பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஆட்சேபனை இருந்தால் அவற்றை 2025.07.25 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட ---- ஆம் இலக்க வெளிக்களத்தாளின் பிரகாரம் நில அளவை நாயகம் என்பவரினால் தயாரிக்கப்பட்ட ----- இலக்க துண்டுகள் வேறாக்கப்பட்ட வரைபடத்திலிருந்து நில அளவை நாயகம் என்பவரினால் நிர்மாணிக்கப்பட்ட நீ. நி. ஆ. வ. 03 ஆம் இலக்க பிரதிப்படத்தில் காணித்துண்டு இலக்கம் 1402 எனக் காட்டப்பட்டுள்ளதும். அநுராதபுரம் நிருவாக மாவட்டத்திற்குட்பபட்ட நாச்சியாதுவ பிரதேச செயலாளர் அலுவலக பிரிவைச் சேர்ந்த நுவரகம் கோரளையிலுள்ள 13 ஏ கிராம அலுவலக பிரிவைச் சேர்ந்த ஹிதோகம எனும் கிராமத்தில் அமைந்துள்ள ஹெக்டயர் 00 ஏக்கர் 02 றூட் 35 பேர்ச் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணி இதன் எல்லைகள் வருமாறு -

வடக்கு : இலக்கம் 1401 காணித் துண்டு;
கிழக்கு : இலக்கம் 1398 காணித் துண்டு;
தெற்கு : இலக்கம் 1403 காணித் துண்டு;
மேற்கு : இலக்கம் 17 டீ காணித் துண்டு.

கழுகல பிரசாத் ஷாமிந்த,
பிரதேச செயலாளர்,
நாச்சியாதுவ.

பிரதேச செயலாளர் அலுவலர்,
நாச்சியாதுவ.

2022, சனவரி 19.

07 - 556

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்ளைச் சட்டத்தின் 19 ஆம் பரிவின் (4) ஆம் துணை உறுப்புரையின் கீழ் வெளியிடப்பட்ட வழங்கல் பத்திரத்தை ரத்துச் செய்தல் - (104 ஆம் உறுப்புரை) அதற்கான அறிவித்தல்**

தென் மாகாண சபையின், மாத்தறை மாவட்டத்தின், பிட்டபெத்தறை பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர் தீக் ஷண திசானாயக்க ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) துணை உறுப்புரையின் கீழ் அதி மேதகு சனாதிபதியினால் 1984.08.07 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள மாத்தறை/பிர/8136 ஆம் இலக்க வழங்கல் பத்திரத்தின் உரிமையாளரான தேரங்கலையை வசிப்பிடமாகக் கொண்ட களுகபுகே கிமாரஹாமி இற்கு வழங்கப்பட்டு கொட்டபொல மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் LDO 207 ஆம் இலக்கத்தின் கீழ் 1990.08.01 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டடுள்ள கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணிக்கு பின் தொடரும் ஒருவர் ஆகுவதற்காக உரிமையாளர் ஒருவர் இல்லாமல் போவதால் அல்லது உரிமை உள்ள ஒருவர் இருந்த போதிலும் அவன்/ அவள் பின்தொடரும் ஒருவராகுவதற்கு விருப்பம் இல்லாமல் போகும் போது பின்தொடர்வதற்கு ஒருவர் இல்லையென்பது அறிய வந்துள்ளதால் குறிப்பிடப்பட்ட வழங்கல் பத்திரத்தை குறித்த சட்டத்தின் 104 ஆம் உறுப்புரையின் கீழ் ரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கறேன் என்பதை தென் மூலம் அறிவித்துக் கொள்கிறேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2025.07.25 ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத் தருதல் வேண்டும்.

**அட்டவணை**

மாத்தறை நிர்வாக மாவட்டத்தின் பிட்டபெத்தற பிரதேச சயலாளர் பிரிவின் மொரவக்கை தொகுதியின் தேரங்கலை மேற்கு (கிரிவெல்கெலே தெற்கு) கிராம அலுவலர் பிரிவின் தேரங்கலை என்னுமகிராமத்தில் அமைந்துள்ளதுமான, மாத்தறை நில அளவையாளர் அதிகாரியின் பொறுப்பில் உள்ள சர்வேயர் அதிகாரியினால் தொகுக்கப்பட்ட அ. க. பி. 27 ஆம் இலக்க துண்டு உடைக்கும் நில அளவைப் படத்தில் 1172 மற்றும் 1231 ஆம் இலக்க காணித் துண்டாக காட்டப்பட்டுள்ள அளவில் முறையே 02 ஏக்கர் 00 ரூட் 19 பர்ச் மற்றும் 01 ரூட் 17 பர்சஸ் அளவு பிரமாண்டமுடையதுமான கீழ் காட்டப்பட்டுள்ளவாறு எல்லைப்படுத்தப்பட்டுள்ளதுமான களுகஹவிலஹேன, இம்புல்கஹஹேன, கந்தஹேன என்னும் அரசாங்க காணி:

1172 ஆம் இலக்க காணித் துண்டு

வடக்கு : அ. க. பி. 27 இல் 1118 ஆம் இலக்க காணித் துண்டு;
கிழக்கு : அ. க. பி. 27 இல் 1773 ஆம் இலக்க காணித் துண்டு;

தெற்கு : அ. க. பி. 27 இல் 1170 ஆம் இலக்க காணித் துண்டு;
மேற்கு : அ. க. பி. 27 இல் 1171 ஆம் இலக்க காணித் துண்டு.

1231 ஆம் இலக்க காணித் துண்டு

வடக்கு : அ. க. பி. 27 இல் 1232 ஆம் இலக்க காணித் துண்டு;
கிழக்கு : அ. க. பி. 27 இல் 1170 ஆம் இலக்க காணித் துண்டு;
தெற்கு : அ. க. பி. 27 இல் 1230 ஆம் இலக்க காணித் துண்டு;
மேற்கு : அ. க. பி. 27 இல் 1234 ஆம் இலக்க காணித் துண்டு.

தீக்ஷண திசாநாயக்க,
பிரதேச செயலாளர் பிரதி,
பிடபெத்தர.

2022, ஏப்பிறல் 09.

07 - 557/1

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்தி கட்ளைச் சட்டத்தின் 19 ஆம் உறுப்புரையின் (4) ஆம் துணை உறுப்புரையின் கீழ் வெளியிடப்பட்ட வழங்கல் பத்திரத்தை இரத்துச் செய்தல் - (104 ஆம் உறுப்புரை) அதற்கான அறிவித்தல்**

தென் மாகாண சபையின், மாத்தறை மாவட்டத்தின், திஹகொட பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர் துமிங்கு ஹேவாகே உதயங்கனீ சந்தமாலி ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) துணை உறுப்புரையின் கீழ் அதி மேதகு சனாதிபதியினால் 1991 மே மாதம் 13 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள மாறை/9/பிர/13049 ஆம் இலக்க வழங்கல் பத்திரத்தின் உரிமையாளரான உனெல்லையை வசிப்பிடமாகக் கொண்ட கெதரவத்தகே குணத்திலக்க இற்கு வழங்கப்பட்டு மாத்தறை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் LDO 444 C 6/269 ஆம் இலக்கத்தின் கீழ் 1991.06.14 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணிக்கு பின் தொடரும் ஒருவர் ஆகுவதற்காக சட்டரீதியாக உரிமையாளர் ஒருவர் இல்லாமல் போவதால் அல்லது உரிமை உள்ள ஒருவர் இருந்த போதிலும் அவன்/ அவள் பின்தொடரும் ஒருவராகுவதற்கு விருப்பம் இல்லாமல் போகும் போது பின்தொடர்வதற்கு ஒருவர் இல்லையென்பது அறிய வந்துள்ளதால் குறிப்பிடப்பட்ட வழங்கல் பத்திரத்தை குறித்த சட்டத்தின் 104 ஆம் உறுப்புரையின் கீழ் ரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறேன் என்பதை இதன் மூலம் அறிவித்துக் கொள்கிறேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2025.07.25 ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத் தருதல் வேண்டும்.

**அட்டவணை**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் கங்கபட பத்துவ தெற்கு பிரதேச வருமான அலுவலர் பிரிவின் கங்கபட பத்துவையின் தெமட்டஹெட்டிகொட கிராம அலுவலர் பிரிவின் உனெல்ல - பாலட்டுவ என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதுமான, மாத்தறை நில அளவையாளர் அதிகாரியின் பொறுப்பில் உள்ள அவரினால் தொகுக்கப்பட்ட 024/32 மு.பி. மாறை/1212 ஆம் இலக்க துண்டு உடைக்கும் நில அளவைப் படத்தில் உள்ள 41 ஆம் இலக்க காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதுமான 0.113 ஹெக்டேயர் என கணக்கிடப்பட்டுள்ளதுமான உனெல்லவத்த எனக் கூறப்படும் கீழ் காட்டப்பட்டுள்ளவாறு எல்லைப்படுத்தப்பட்டுள்ளதுமான அரசாங்க காணித் துண்டு -

வடக்கு : மு. பி. மாறை/1212 இல் ஆம் 40 இலக்க துண்டு;
கிழக்கு : மு. பி. மாறை/1212 இல் குளம்;
தெற்கு : மு. பி. மாறை/1212 இல் ஆம் 43 இலக்க துண்டு;
மேற்கு : மு. பி. மாறை/1212 இல் பாதை .

டீ. எச். யூ. சந்தமாலி,
பிரதேச செயலாளர்,
திஹகொட.

2025, மாச்சு 11.

07 - 557/2

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்தி கட்ளைச் சட்டத்தின் 19 ஆம் உறுப்புரையின் (4) ஆம் துணை உறுப்புரையின் கீழ் வெளியிடப்பட்ட வழங்கல் பத்திரத்தை இரத்துச் செய்தல் - (104 ஆம் உறுப்புரை) அதற்கான அறிவித்தல்**

தென் மாகாண சபையின், மாத்தறை மாவட்டத்தின், திஹகொட பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர் துமிங்கு ஹேவாகே உதயங்கனீ சந்தமாலி ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) துணை உறுப்புரையின் கீழ் அதி மேதகு சனாதிபதியினால் 1991, யூன் மாதம் 20 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள மாறை/9/பிர/13127 ஆம் இலக்க வழங்கல் பத்திரத்தின் உரிமையாளரான பாலட்டுவை வசிப்பிடமாகக் கொண்ட அபேதொல ஹேவகே குணவத்தீ இற்கு வழங்கப்பட்டு மாத்தறை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் கங்கபடபத்துவ (தெ) / LDO 588 C 29 ஆம் இலக்கத்தின் கீழ் 1991.10.17 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணிக்கு பின் தொடரும் ஒருவர் ஆகுவதற்காக சட்டரீதியாக உரிமையாளர் ஒருவர் இல்லாமல் போவதால் அல்லது உரிமை உள்ள ஒருவர் இருந்த போதிலும் அவன்/ அவள் பின்தொடரும் ஒருவராகுவதற்கு விருப்பம் இல்லாமல் போகும் போது பின்தொடர்வதற்கு ஒருவர் இல்லையென்பது அறிய வந்துள்ளதால் குறிப்பிடப்பட்ட வழங்கல் பத்திரத்தை குறித்த சட்டத்தின் 104 ஆம் உறுப்புரையின் கீழ் ரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறேன் என்பதை இதன் மூலம் அறிவித்துக் கொள்கிறேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2025.07.25 ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத் தருதல் வேண்டும்.

**அட்டவணை**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் கங்கபட பத்துவ தெற்கு பிரதேச வருமான அலுவலர் பிரிவின் கங்கபட பத்துவையின் தெமட்டஹெட்டிகொட கிராம அலுவலர் பிரிவின் பாலட்டுவ என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதுமான, மாத்தறை நில அளவையாளர் அதிகாரியின் பெறுப்பில் உள்ள அவரினால் தொகுக்கப்பட்ட 024/32 மு. பி. மாறை /1425 ஆம் இலக்க துண்டு உடைக்கும் நில அளவைப் படத்தில் உள்ள 12 ஆம் இலக்க காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதுமான 0.0418 ஹெக்டேயர் என கணக்கிடப்பட்டுள்ளதுமான உனெல்லவத்த எனக் கூறப்படும் கீழ் காட்டப்பட்டுள்ளவாறு எல்லைப்படுத்தப்பட்டுள்ளதுமான அரசாங்க காணித் துண்டு -

வடக்கு : மு. பி. மாறை/1425 இல் 9 ஆம் இலக்க துண்டு;
கிழக்கு : மு. பி. மாறை/1425 இல் 9, 13, 19 ஆம் இலக்க துண்டுகள்;
தெற்கு : மு. பி. மாறை/1425 இல் 20, 21 ஆம் இலக்க துண்டுகள்;
மேற்கு : மு. பி. மாறை/1425 இல் 11, 21 ஆம் இலக்க துண்டுகள் .

டீ. எச். யூ. சத்தமாலி,
பிரதேச செயலாளர்,
திஹகொட.

2025, மாச்சு 11.

07 - 557/3

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்தி கட்ளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப் பத்திரத்தை இரத்துச் செய்தல் (பிரிவு 104) தொடர்பான அறிவித்தல்**

அதி உத்தமாரம் சனாதிபதி அவர்களிளால், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் பிரிவின் கீழ், மொ/பிர 51407 ஆம் இலக்கத்தைக் கொண்ட அளிப்பு நக்கல, மெதிரிய முகவரியில் வசிக்கும் ரத்நாயக முதியனசேலகே கருணாபால என்பவருக்கு 2000.06.26 ஆம் திகதி வழங்கப்பட்டது. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இந்தப் பற்று நிலம் மொனராகலை மாவட்டப் பதிவாளரின் அலுவலகத்தில் LDO/L34/141 ஆம் இலக்கத்தின் கீழ் 2001.05.15 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளது. இப் பற்று நிலத்திற்குச் சட்ட முறையிலான பின்னுரிமையாளர் இல்லை என்பதாலோ, அல்லது பின்னுரிமையாளர் இருந்தும் அவர் சட்ட முறையிலான பின்னுரித்து உரிமைக்கு விருப்பம் இல்லாமல் இருப்பதாலோ, பின்னுரிமையாளர் ஒருவரை நியமனம் செய்யவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் ஊவா மாகாண சபையின் படல்கும்புறை பிரதேசச் செயலகப் பிரிவின் பிரதேசச் செயலாளராக கே. வீ. டீ. சீ. விமலசிரி ஆகிய நான், மேலே சொல்லப்பட்ட

அளிப்பு பத்திரத்தைக் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்து வருகிறேன் என்பதை இத்தால் அறியத்தருகிறேன். இந்த நடவடிக்கையை எதிர்த்து ஏதும் ஆட்சேபம் இருந்தால், அதை 2025.07.25 ஆம் திகதிக்கு முன்னதாக எனக்கு எழுத்து மூலம் அறிய தருதல் வேண்டும்.

**அட்டவணை**

மொனராகலை நிருவாக மாவட்டத்தின படல்கும்புறை பிரதேசச் செயளராலர் பிரிவின் கந்துகற பற்றில்/ கோறளையில் தேரப்பஹவ கிராம அலுவலரின் பகுதியில் உள்ள மெதிரியகம கிராமத்தில் அமைந்துள்ளதும் .................. என அழைக்கப்படுவதும், நில அளவையாளர் நாயகம் அவர்களினால் தயாரிக்கப்பட்டு .................. என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள .................... ஆம் இலக்கக் களத்தாளில் .................... இலக்க வரைப்படத்தில் அவர்களால் தயாரிக்கப்பட்ட ........... ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் .................. அவர்களால் தயாரிக்கப்பட்ட ................ ஆம் இலக்க உருவப்படத்தில் ............. ஆம் இலக்கக் காணித்துண்டு எனக்குறிப்பிடப்படுவதும் .................. ஹெக்டயர் 02 ஏக்கர் .......... றூட் ............. பேர்ச் விஸ்தீரணமுல்லதும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு.

வடக்கு : எச். ஏ. பாலபண்டாவயை இடம்;
கிழக்கு : ஆர். எம். கருணாரத்னவரைய இடம்;
தெற்கு : ருப்ப கிராமத்திறடு செல்லும் பாதை;
மேற்கு : ஆர். எம். தனபால இடம்.

கே. வீ. பீ. சி. விமலசிரி,
பிரதேச செயலாளர்,
படல்கும்புர.

2024, திசெம்பர் 10.

07 - 558

# நானாவித காணி அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/64502.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: NP/28/04/02/SLO/45/1439.

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் (KN/73) முழங்காவில் கிராம அலுவலர் பிரிவில் முழங்காவில் கிராமத்தில் காணி அலுவலரால் தயாரிக்கப்பட்ட தோராயமான சுவட்டு வரைபடம் மூலம் காண்பிக்கப்பட்டுள்ள 05 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரசாங்கக் காணித் துண்டை விவசாய நடவடிக்கைகளுக்காக விநாயகபுரம் கமநல கூட்டுறவு சங்கத்தினால் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வடக்கு: பாதை;
கிழக்கு: அரசாங்கக் காணி;
தெற்கு: அரசாங்கக் காணி;
மேற்கு: அரசாங்கக் காணி.

03.கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2021.08.10 ஆம் திகதி முதல் முன்னோக்கி)

(ஆ) வருடாந்த குத்தகைத் தொகை :- 2021 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ. 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 2% ஆகும். 2021 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபா உம் (ரூ. 5,000,000.00) அதற்கு அதிகமாக இருக்குமிடத்து தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் காணிக்கான அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்மைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

தவணைத் தொகை :- தவணைத் தொகை அறவிடப்பட மாட்டாது;

(இ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் இந்தக் காணியை விவசாய நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) இந்தக் குத்தகை ஆரம்பித்து ஒரு (01) வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாண காணி ஆணையாயர்/ பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) அமைக்கப்பட்டுள்ள/நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(எ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஏ) 2021.08.10 ஆந் திகதியிலிருந்து ஐந்து (05) வருடங்கள் கழியும் வரை உப குத்தகை அல்லது உரிமை மாற்றங்களுக்கு அனுமதி வழங்கப்பட முடியாது;

(ஐ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகையைச் செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொண்டிராத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டும் நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்ட வரி அறவிடப்படும்.

வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

கே. ஜீ. பீ. சௌம்யா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம், இலக்கம் 1200/6,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, யூன் 16.

07 - 545

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/74934.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: PLC/L2/25/7/23.

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், வத்தளை பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 166/A, குஞ்சாவத்த கிராம அலுவலர் பிரிவின் நுகபே கிராமத்தில் ஆ. கி. ப. 3515 இன் துண்டு இலக்கம் 01 இனால் காண்பிக்கப்பட்டுள்ள 0.0253 ஹெக்டேயர் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித் துண்டை வர்த்தக நடவடிக்கைகளுக்காக வரையறுக்கப்பட்ட வத்தளை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தினால் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வடக்கு: ஆ. கி. ப. 3514 இன் 54 ஆம் இலக்க துண்டு;
கிழக்கு: அரசாங்கத்துக்குச் சொந்தமான முத்துராஜவெல;
தெற்கு: துண்டு இல. 02 மற்றும் ஆ. கி. ப. 3514 இன் 56 ஆம் இல. துண்டு;
மேற்கு: ஆ. கி. ப. 3514 இன் 56, 55 மற்றும் 54 ஆம் இலக்க துண்டுகள்.

03.கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2024.05.28 முதல் 30 வருடங்கள் முன்னோக்கி)

(ஆ) வருடாந்த குத்தகைத் தொகை :- 2024 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ. 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2024 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபா உம் (ரூ. 5,000,000.00) அல்லது ஐந்து மில்லியன் ரூபாவிலும் அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

தவணைத் தொகை :- தவணைத் தொகை அறவிடப்பட மாட்டாது;

(இ) இந்தக் காணியை வர்த்தக நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) இந்தக் குத்தகை ஆரம்பித்து ஒரு வருட காலத்திற்குள் மாகாண காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாண காணி ஆணையாயர் (மேல் மாகாணம்)/ பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) அமைக்கப்பட்டுள்ள/நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(எ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஏ) 2024.05.28 ஆந் திகதி முதல் 05 வருடங்கள் கழியும் வரை உப குத்தகை மற்றும் உரிமை மாற்றல்களுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. அதன் பின்னரும், இந்தக் காணியைக் குத்தகைக்குப் பெற்றுக் கொண்ட வியடத்திற்கு மாத்திரமே உப குத்தகை அல்லது உரிமை மாற்றம் செய்வதற்கு முடியும்;

(ஐ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகையைச் செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொண்டிராத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்ட வரி அறவிடப்படும்;

(ஒ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

கே. ஜீ. பீ. சௌம்யா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம், இலக்கம் 1200/6,
“மிஹிகத மெதுர”,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, யூன் 25.

07 - 587

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/76988.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: PLC/ L2/19/7/37.

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தின் திவுலபிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 56, படல்கம கிராம அலுவலர் பிரிவின் படல்கம கிராமத்தில் 510116 ஆம் இலக்க கடத்திரல் வரைபடத்தின் வலய இலக்கம் 02 இன் துண்டு இலக்கம் 02 இனால் காண்பிக்கப்பட்டுள்ள 0.0018 ஹெக்டயார் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித் துண்டை வர்த்தக நடவடிக்கைகளுக்காக இலங்கை வங்கி (மேல் மாகாணம் - வடக்கு அலுவலகம்) இனால் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

வடக்கு: கடத்திரல் வ. ப. 510116 வலயம் 02 பத்திரம் 09 துண்டு இலக்கம் 01;
கிழக்கு: கடத்திரல் வ. ப. 510116 வலயம் 02 பத்திரம் 09 துண்டு இலக்கம் 01;
தெற்கு: கடத்திரல் வ. ப. 510116 வலயம் 02 பத்திரம் 09 துண்டு இலக்கம் 01;
மேற்கு: கடத்திரல் வ. ப. 510116 வலயம் 02 பத்திரம் 09 துண்டு இலக்கம் 01.

03.கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.05.23 முதல் 30 வருடங்கள் முன்னோக்கி)

(ஆ) வருடாந்த குத்தகைத் தொகை : 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து

மில்லியன் ரூபாவிலும் (ரூ. 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ. 5,000,000.00) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

தவணைத் தொகை : தவணைத் தொகை அறவிடப்பட மாட்டாது;

(இ) இந்தக் காணியை வர்த்தக நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) இந்தக் குத்தகை ஆரம்பித்து ஒரு வருட காலத்திற்குள் மாகாண காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாண காணி ஆணையாளர் (மேல் மாகாணம்)/ பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) அமைக்கப்பட்டுள்ள/நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(எ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஏ) 2025.05.23 ஆந் திகதி முதல் 05 வருடங்கள் கழியும் வரை உப குத்தகை மற்றும் உரிமை மாற்றல்களுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. அதன் பின்னரும், இந்தக் காணியைக் குத்தகைக்குப் பெற்றுக் கொண்ட வியடத்திற்கு மாத்திரமே உப குத்தகை அல்லது உரிமை மாற்றம் செய்வதற்கு முடியும்;

(ஐ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகையைச் செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொண்டிராத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்ட வரி அறவிடப்படும்;

(ஒ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

கே. ஜீ. பீ. சௌம்யா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம், இலக்கம் 1200/6,
"மிஹிகத் மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, யூன் 25.

07 - 588

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தின் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்பட மாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.-** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**அட்டவணை 2025**

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| யூலை | .. | வெள்ளி | 04.07.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.06.2025 |
| | | வெள்ளி | 11.07.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.06.2025 |
| | | வெள்ளி | 18.07.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.07.2025 |
| | | வெள்ளி | 25.07.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.07.2025 |
| ஓகத்து | .. | வெள்ளி | 01.08.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.07.2025 |
| | | வியாழன் | 07.08.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.07.2025 |
| | | வெள்ளி | 15.08.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.08.2025 |
| | | வெள்ளி | 22.08.2025 | .. | நண்பகல் 12 | வியாழன் | 07.08.2025 |
| | | வெள்ளி | 29.08.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.08.2025 |
| செத்தெம்பர் | .. | வியாழன் | 04.09.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.08.2025 |
| | | வெள்ளி | 12.09.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.08.2025 |
| | | வெள்ளி | 19.09.2025 | .. | நண்பகல் 12 | வியாழன் | 04.09.2025 |
| | | வெள்ளி | 26.09.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.09.2025 |

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது